**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 1223/2025**
**U/s. 294(b),341,323,324,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 1(LW. 1)**

| | |
|---|---|
| **Name** : தங்கபாலன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.1223 /2025 11.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.40**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் ரோடு அருளானந்தபுரத்தில் குடியிருந்து வாட்டர் பிரிபயர் பிஸ்னஸ் செய்து வருகிறேன். கடந்த 17.03.2022 ம் தேதி காலை எனக்கு ஒரு போன் வந்தது. அந்த நபர் போனில் வாட்டர் பிரிபயரை சரி செய்யவேண்டும் என்று 6382036072 என்ற எண்ணிலிருந்து கூறினார். என்னால் வர இயலாது வேறு ஒரு நபரை வைத்து பார்த்து கொள்ளவும் என்று தெரிவித்தேன். நாலு கால் மண்டபத்திற்கு மதியம் 2 மணிக்கு சென்று என்னை தொடர்பு கொண்ட எண்ணிற்கு தொடர்பு கொண்டபோது அந்த நபர் போனை எடுக்கவில்லை. மீண்டும் அதே எண்ணிலிருந்து 5.00 மணிக்கு போன் வந்தது. அந்த நபர் எனது மனைவி கர்பிணியாக உள்ளதால் பிரிபயர் வாட்டரை சரி செய்து கொடுக்குமாறு கேட்டுகொண்டார். மாலை 5.30 மணியளவில் நாலுகால் மண்டபத்திற்கு அருகிலுள்ள நாடார் பெட்டிகடைக்கு அருகே வந்து நில்லுங்கள் நான் அழைத்து செல்கிறேன் என்று சொன்னார்கள். அந்த இடத்திற்கு நான் சென்றவுடன் நான்கு நபர்கள் என்னை தடுத்து நிறுத்துகிறார்கள். ஏன் என்னை மறிக்கிறீர்கள் என்று நான் கேட்டதற்கு விக்னேஷ் என்ற நபர் புண்டை மகனே என்ன தெரியாத உனக்கு ஆளு அட்ரஸ் எல்லாம் சொல்லனுமா என்று அருவருக்கதக்க வார்த்தையால் திட்டி எனது முதுகிலும், நெஞ்சிலும் தாக்கியதால் நான் கீழே விழுந்தேன். கார்த்திக் என்ற நபரும் என்னை பார்த்து தேவுடியா மகனே என்று திட்டி அவரும் என்னை கன்னத்திலும், இடது பக்க தோள் பட்டையிலும் தாக்கினார். திருவருட் செல்வன் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் என்னை ஒரு அடி அடித்தவுடன் சிவசுப்ரமணியன் திருவருட்செல்வன் கையிலிருந்த கட்டையை பிடுங்கி எனது வலது பக்க கையின் மணிகட்டில் அடித்தவுடன் எனக்கு வலி தாங்க முடியாமல் நான் சத்தம் போட்டேன். பொதுமக்கள் கூடியதும் எதிரிகள் என்னைக்கா இருந்தாலும் என் கையால் தான் சாவு என்று கட்டையை காட்டி மிரட்டி சென்றார்கள். நான் எனது தம்பி தனவேந்திரன் தகவல் சொல்லி அவர் அங்கு வந்தார் . நான் அவருடன்

தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். நான் அங்கு ஒரு மாத கால அளவு சிசிக்சையில் இருந்தேன். நான் எதிரிகளிடம் கிருஷ்ணா பைனாஸ்சில் கடன் பெற்றிருந்தேன். கொரனா காலம் என்பதால் பணத்தை சரிவர செலுத்த முடியாததால் அவர்களிடம் அவகாசம் கேட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1–3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி பட்டியல் உள்ள சாட்சிகள் சதிஷ், முனுசாமி, தினேஷ் த/பெ மனோகரன், தினேஷ்த/பெ ஜேம்ஸ், பிரபாகரன் ஆகியோர் எனது நண்பர்கள் . தனவேந்திரன் எனது தம்பி ஆவார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்றே புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. 23.03.2022 ம் அன்று எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன் . நான் முதல் விசாரணையில் எனக்கு போன் வந்ததாக கூறியுள்ளேன் என்றாலும், போலீஸ் விசாரணையில் என்னுடைய எந்த கைபேசி எண்ணிற்கு போன் வந்ததாக குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் மதியம் 2.00 மணியளவில் நாலுகால் மண்டபத்திற்கு சென்றதாகவும், அந்த நபர் போனை எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள விவரத்தை போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு அன்றையதினம் மீண்டும் 5.00 மணியளவில் அதே எண்ணிலிருந்து போன் வந்ததாக போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் 5.30 மணியளவில் போன் வந்ததாக சொன்னேன். 1 வது எதிரி விக்னேஷ் புண்டைமகனே என்று திட்டினார் என்பதை போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன்.

2. போலீசார் என்னை முதலில் விசாரித்தபோது கார்த்திக் என்னை கெட்டவார்த்தைகளால் திட்டியதாக போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள பட்டியல் சாட்சி நபர்கள் சம்பவயிடத்தை சார்ந்த நபர்கள் இல்லை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் , கடைகள் உள்ளன என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் சேர்க்கும் போது நான் தான் நடந்த சம்பவத்தை மருத்துவரிடம் கூறினேன் என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் என்னை அடையாளம் தெரியாத 4 நபர்கள் தாக்கியதாக சொன்னேன் என்றால் இல்லை. அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 4 நபர்கள் தாக்கியதாக சொன்னேன். நான் வழக்கிற்காக

தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணா பைனான்ஸ் உரிமையாளர் மணி என்கிற சுப்ரமணியன், திருவருட்செல்வன் ஆகியோரில் யார் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்றால் மணி என்கிற சுப்ரமணியன் கிருஷ்ணா பைனான்ஸ் உரிமையாளர் ஆவார்.

3. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் மணி என்கிற சுப்ரமணியன், திருவருட்செல்வன் ஆகியோர் கரூரில் இருந்ததாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். எனது தம்பி தனவேந்திரனுக்கு சம்பவ நடந்த பிறகு தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவயிடத்திற்கு என்னை மருத்துவமனை அழைத்து சென்றார் என்றால் சரிதான். தனவேந்திரன் தகவல் கொடுத்தன் பேரில் மற்ற இருவரும் சதிஷ், தினேஷ், முனுசாமி ஆகியோர் மருத்துவமனைக்கு வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். ஆனால் முனுசாமி என்பவர் சாட்சி ராகவேந்திரனின் தந்தை. ராகவேந்திரன் தான் சம்பவயிடத்தில் இருந்தார். ராகவேந்திரன் தான் சம்பவயிடத்தில் இருந்தார் என நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. மணி, விக்னேஷ் , சிவசுப்ரமணியன் ஆகியோரில் யார் நம்பரிலிருந்து எனக்கு போன் வந்தது என்று போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொன்னேன். எனது போனை போலீசாரிடம் விசாரணைக்காக கொடுத்து எனது எண்ணிற்கு போன் வந்த விவரத்தினை சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்திற்கு பிறகு போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னை இருமுறை விசாரித்தார்கள்.

4. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை. நான் கிருஷ்ணா பைனான்ஸ்சில் வாங்கிய தொகையை இது நாள் வரை செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விதமாக எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தினை பயன்படுத்தி நான் கிருஷ்ணா பைனான்சில் பெற்ற கடனிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த விதமான சம்பவமும் நடைபெறவில்லை இச்சூழ்நிலையில் பொய்யாக கிருஷ்ணா பைனான்ஸ் உரிமையாளர் மற்றும் வேலை யாட்கள் மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன நாள், நேரத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.